வருவாய்த் துறை அலுவலர்களால், வன நிலங்களாக மாற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

39--

இலவச சீத்தாப் பழக்கன்றுகள் வழங்குதல்

வினா எண் *1339*--**திரு. ஜி. கே. மணி**: மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி மக்களுக்கு வனத்துறை மூலம் இலவசமாக சீத்தாப்பழக் கன்றுகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை--

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி மக்களுக்கு வனத்துறை மூலம் இலவசமாக சீத்தாப்பழக்கன்றுகள் வழங்கும் திட்டம் எதுவும் நிலுவையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

40--

சத்துணவுக்கூடத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல்

வினா எண் *1534*--**திரு. இ. கணேசன்**: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

எடப்பாடி நகராட்சி, 21-வது வார்டில் இயங்கி வரும் சத்துணவுக் கூடத்திற்கு புதியக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

1996 ஆகஸ்ட் 20]

விடை--

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

நிதிப் பற்றாக்குறையினால் எடப்பாடி நகராட்சியில் புதியதாக சத்துணவு மையக் கட்டிடங்கள் கட்டுவதற்கான கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

41--

பாரதி பிறந்த வீட்டைப் பழுது பார்த்தல்

வினா எண் 772--**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், எட்டையபுரம் பாரதி பிறந்த வீடு பழுதடைந்துள்ளதாக அரசுக்குப் புகார் ஏதேனும் வந்துள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:

இல்லை.

42--

திரு. சர்தார் வேதரத்னம் பிள்ளைக்கு தஞ்சாவூரில் சிலை

வினா எண் 1360--**திரு. அ. லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

உப்பு சத்யாகிரகத் தியாகி, திரு. சர்தார் வேதரத்னம் பிள்ளைக்கு தஞ்சாவூர் நகரில் சிலை நிறுவ அரசு முன்வருமா?

விடை--

மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் :

பரிசீலனையில் இல்லை.